அருணாசலம் பிக்சர்ஸ்

ARUNACHALAM PICTURES MADRAS-26

பொன்னித் திருநாள்

இசை : K.V.மகாதேவன் ★ தயாரிப்பு-டைரக்ஷன் : A.K.வேலன்

கதைச் சுருக்கம்

கண்ணும் கண்ணும் கலந்தால் காதல்!
மனமும் மனமும் ஒன்றுபட்டால் காதல்!

அமராவதி அம்பிகாபதியைக் காதலித்தாள். அறிவு அவளைக் கவர்ந்தது. அந்தஸ்து அவர்களின் காதலுக்குக் குறுக்கே நிற்க முடியவில்லை.

பொம்மி வீரனைக் காதலித்தாள். வீரம் அவளைக் கவர்ந்தது. ஜாதி அவர்கள் காதலை வெட்டிப் பிரிக்க முடியவில்லை.

விமலா பொன்னனைக் காதலித்தாள். பொன்னனின் நேர்மைக் குணமும், நெஞ்சுத் துணிவும் அவளைக் கவர்ந்தன. பண்பும் பரிவும் அவளது அன்பை அவனுக்குத் தேடிக் கொடுத்தன. தன் நெஞ்சத்து எண்ணத்தை அவனுக்கு அறிவித்தாள். மாளிகையிலே வளர்ந்தவள் மண் குடிசையிலே வாழ முடியாது—என்றான். ஆனாலும் அவள் உறுதி குலையவில்லை.

ஏழை, அந்தஸ்து அற்றவன், குடிசையில் வாழ்வோன் என்றெல்லாம் அவள் தந்தை கூறி அவள் காதலை மறுத்தபோது நெஞ்சத்தில் குடியேறிவிட்ட அவர் ஏழையானால் என்ன, இனி அவரே என் வாழ்வு என்று துணிவோடு கூறினாள். அவள் அப்பா அவனை ஆள் வைத்து அடித்த போதும் கலங்கினாளில்லை, மாறாக உரம் பெற்றாள். உறுதி கொண்டாள். மாறுவேடமிட்டுச் சென்று மருத்துவ மனையிலே காதலனைச் சந்தித்தாள். அங்கே அவள் நெஞ்சுருக அழுதது பொன்னன் தகப்பனாரின் நெஞ்சைக் கூட கரைத்து விட்டது. ஆனாலும் மகன் உயிரைக் காப்பாற்ற விரும்பிய தகப்பனார் அவனை பட்டாளத்திற்கு அனுப்ப முடிவு செய்து விட்டார். முத்து முத்தாய்ப் பெருக்கெடுத்த கண்ணீரோடு விடைகொடுத்தாள். பொன்னன் சென்றதும் விமலாவின் தந்தைசெய்த சூழ்ச்சியால்குப்பம் அழிக்கப்பட்டது.பொன்னனின் நினைவால் வாடிய விமலாவுக்கு மீண்டும் ஓர் அதிர்ச்சி காத்துக் கிடந்தது. ஆமாம், அவளுக்குத் திருமணமென்ற செய்திதான்.

பொன்னனுக்குக் கடிதம் எழுதினாள். அது சதிகாரன் ஒருவன் கையிலே சிக்கியது. திருமண ஏற்பாட்டிலிருந்து தப்பியோடியவள் அவளை அறியாமலே சதிகாரன் விரித்த வலையிலே விழுந்து விட்டாள். ஆனால் உலகம் அவள் ஆற்றிலே விழுந்து இறந்து விட்டதாக நினைத்தது.

மகள் ஆற்றோடு போய் விட்டாள் என்றறிந்த நாகநாதர், மனம் மாறினார். அவர் சொத்தெல்லாம் பள்ளிக்கூடமாக, ஏழை மாணவர் இல்லமாக, மருத்துவ மனையாக மாறின. திரும்பி வந்த பொன்னன் விமலா இறந்து விட்டாள் என்று அறிந்து மூர்ச்சையானான். விமலாவின் தோழி சரசாவின் வீட்டிலே சிகிச்சை பெற்றான். காதலியைத் தேடி வந்தவன் காதலிக்கப்பட்டான். அவன் எவ்வளவோ மறுத்தும் எல்லோரும் சேர்ந்து பொன்னனுக்கும் சரசாவுக்கும் திருமண ஏற்பாடு செய்துவிட்டனர். சதிகாரன் பிடியிலிருந்து தப்பி வந்த விமலா, பொன்னனையும் சரசாவையும் மணக்கோலத்திலே கண்டாள்.

விளைவு என்ன? **வெற்றி யாருக்கு?**

"பொன்னித் திருநாள்"
பாடல்கள்

இயற்றியவர் : 1 பாடியவர்கள் :

மருதகாசி

திருச்சி லோகநாதன்
ஜமுனா ராணி
சூலமங்கலம்
ராஜலட்சுமி & பார்ட்டி

பெண் : பொங்கிவரும் காவிரியே எங்களது தாயே
கங்கையினும் மேலான கன்னித்தெய்வம் நீயே.
(பொங்கி)

ஆண் : மங்கையரின் முகத்தழகு மஞ்சள் பூச்சினாலே
மாநிலத்தின் அழகுனது வண்டல் பாய்ச்சலாலே.
(மங்கை)

பெண் : அங்கமெலாம் அலைபுரள அசைந்து வரும் பாவை
செங்கரும்பு பயிர்வளரச் செய்வதும் உன்சேவை
(அங்க)

இருவரும்: பொங்கிவரும் காவிரியே எங்களது தாயே
கங்கையினும் மேலான கன்னித் தேய்வம் நீயே
(பொங்கி)

ஆண் : மாலையிட்ட மங்கையர்கள் தாலி பெருக்கிப்
படைப்பார்
மணவாளன் கைபிடித்து சிரித்தபடி நடப்பார்.

பெண் : வாளையைப்போல் காளையர்கள் தாவித்தாவி
குதிப்பார்
மனங்கவரும் கன்னியர்மேல் நீரை வாரி இறைப்பார்
(பொங்கி)

பெண் : மலைமுடியில் பிறந்ததனால் மலைமகளும் நீயே
அலைகடலில் பிறந்ததனால் அலைமகளும் நீயே

ஆண் : சலசலக்கும் ஓசையிலே ஏழுசுரம் தந்தாயே

பெண் : தமிழ் முழக்கம் செய்வதனால் கலைமகளும் நீயே.
(பொங்கி)

இயற்றியவர் : 2 பாடியவர்கள் :

தஞ்சை ராமையாதாஸ்

சீர்காழி கோவிந்தராசன்
ராகவன்
பொன்னுசாமி
D. L. ராஜேஸ்வரி

எரிந்த கட்சி:

கரும்பு வில்லையெடுத்து, கண்டஜாதி பூதொடுத்து
கண்ணுசாமி மேலே பாணம் பொடபோட—மூணு
கண்ணு சாமிமேலே பாணம் போடபோட—சிவன்
கண்ணையும் திறந்தவுடன் மன்மதன் எரிந்திடவும்
கதறி அழுதாள் ராகத்தோட—ரதி
கதறி அழுதாள் ராகத்தோட தோட
மச்சான் காலங்கெட்டதாலே டகல் அடிக்காதே
டேப்பு தாளம் விட்டு டேஞ்சர் நடை கொடுக்காதே.

எரியாத கட்சி:

காமனும் எரிஞ்சிருந்தா காளேவயசு மைனரெல்லாம்
கன்னிப்பெண்ணை சுத்தி ஏண்டா வர்ருன், வர்ருன்-மேலும்
கடவுள் கொடுத்த அந்தக் கருவை அழிக்க ஏன்
கர்ப்பத்தடை ஆபரேஷன் செய்ருன், செய்ருன்
மாமா கதையை என்னிடம் அளக்காதே—மணல்
கொண்டு கயிரை திரிக்காதே.

எரிந்த கட்சி :

அகோய் எந்தன் சொல்லைக் கேளும் பிள்ளாய் பிள்ளாய்

எரியாத கட்சி:

ஆகாய் பதில் இப்பவே நீ சொல்லாய் சொல்லாய்

எரிந்த கட்சி:

வேதாந்தம் சொல்லுதடா

எரியாத கட்சி:

விஞ்ஞானம் கேக்குதடா

எரிந்த கட்சி:

ஆதாரம் இருக்குதடா

எரியாத கட்சி:

அறிவுலகம் சிரிக்குதடா
ஆனு அவன்னு முதல் அக்கன்னுவும் புரியாதவனே—

எரிந்த கட்சி:

ஆல்ரைட் இதோ அத்தாரிட்டி பாரு! பாரு—

மன்மதன்:

செங்கரும்பு வில்லையெடுத்து, சிலேடையான பூவைத்
தொடுத்து

ரதி : பூவை தொடுத்து — தூ — தூ

மன்: தேவேந்திரன் சொல்லையடுத்து, சிவனாரின் தபசைகலைத்து

ரதி : தபசைக் கலைத்து—தூ,தூ—

மன்: வருவேனே பரமசிவன் மகளே என் பத்தினி ரதியே
தருவாயடி உத்தரவும் இனியே — யே — யே —
தத்தோம் — தத்தோம் — தகஜனு
தத்தளாங்கு திமி—தகதிமி—தகதிமி
சியா போட்டு சியான் ......

ரதி : போகாதே என் கணவா நீ, போனாலே எரிஞ்சிடுவாய் நீ...

மன்: எரிஞ்சிடுவாய் நீ—நீ—நீ——

ரதி : பொல்லாத காலமும் வந்தா புடலங்காய் பாம்பா மாறும்

மன்: பாம்பா மாறும் — றும் — றும் —

ரதி : சாகாமல் நீ இருந்தாத்தான் என் தாலியை வாங்க
சாத்திரப்படி வரவே மாட்டாங்க......
தத்தோம் — தத்தோம் — தகஜனு
தத்தளாங்கு திமி — தகதிமி, —தகதிமி—
உவாம் போட்ரு உவா......

இருவ: தத்தோம் தத்தோம் தகஜனு
தத்தளாங்கு திமி—தகதிமி—தகதிமி—
மேளம் கொட்ரு மேளம் ......

மன்: பாம்பாட்டி பெற்றவளே அப்பனைப்போல பலவித்தை
கற்றவளே
வீம்பாகவே பேசும் வித்தாரம் அறிவேனே,
விண்ணவரைக் காக்க விடைதாரும் பெண்மானே,
விஷ்ணுவின்மகன் நானே எதிர்த்தால் வேரோடு
அழிப்பேனே—

ரதி : மாடோட்டி பெற்றவரே காதல் வியாதி மருந்தையும்
விற்பவரே
மலர் பாணத்தை உங்க மாமா மேலே போட்டு
மன்னு நீ மண்ணோடு மறைவதை நான் கேட்டு
உயிரோடு வாழணுமா, உனக்காக ஒப்பாரி பாடணுமா...

மன்: உன் இஷ்டம்—

மன்: பெண்கொடுத்த மாமனாரே சரணமய்யா
பிள்ளைக்கறி கேட்டவரே சரணமய்யா
மண் சுமந்த மாமனாரே சரணமய்யா—மலர்
பாணத்தைத் தொடுக்கப் போறேன் சரணமய்யா
இதோ போடப் போறேன் பாணம் போடப் போறேன்
இப்ப போட்டவுடன் ஓட்டமாக ஓடப்போறேன்,

சிவன்: யாரடா பயலே நீதான் அஞ்சாமல் எதிரில் நின்று
கூறிய பாணமேந்தி தபசையும் கலைக்க வந்தாய்...

மன்: ம்! ம்! உங்க மாப்பிள்ளைங்க—

சிவன்: பேரிடி முழக்கம் போலே பித்தனின் நெற்றிக் கண்ணால்
வேலுடன் வில்லும் சாய வீசிடும் ஜ்வாலை பாராய்...

ரதி: மகா தேவ தேவா மாங்கல்ய பிச்சை தாரும்

சிவன்: மகளே நீ மறைக்காதே

ரதி: உன் மருமகனை நீ எரிக்காதே

சிவன்: அவமானப் படுத்திட பாணம் தொடுத்திட

ரதி: தேவ, தேவா, மகாதேவா, மாங்கல்ய பிச்சை தாரும்

சிவன்: புத்திரியே உன் புருஷனுக்கு நீ புத்தி சொல்லக் கூடாதா

ரதி: போனது போகட்டும் ஆனது ஆகட்டும் பிழை பொறுக்க

சிவன்: எது சொன்னாலும் நடக்காது

ரதி: இனித் தூக்கமே பிடிக்காது

சிவன்: உன் ஜோடி பிரிந்திட காலமும் வந்தது

ரதி: மகா தேவா தேவா மாங்கல்ய பிச்சை தாரும்—

3

இயற்றியவர்:
தெய்வத் திரு. ஆண்டாள்

பாடியவர்:
சூலமங்கலம் ராஜலட்சுமி

மத்தளம் கொட்ட வரிசங்கம் நின்றூத
முத்துடைத் தாவம்நிறை தாழ்ந்த பந்தற்கீழ்
மைத்துனன் நம்பி மதுசூதனன் வந்துஎன்னை
கைத்தலம் பற்ற கனாக்கண்டேன் தோழிநான்.

4

இயற்றியவர் :
புத்தனேரி சுப்ரமண்யம்

பாடியவர்கள் :
பி. பி. சீனிவாசன்
பி. சுசீலா

பெண் : வீசுதென்றலே வீசு—வேட்கை
தீரவே வீசு!
மாசு இல்லாத என் ஆசைக்காதலன்
வந்து செந்தமிழிலே சிந்துபாடவே.

ஆண் : பாடு கோகிலம் பாடு—பாசமாக நீபாடு
தேடுங்காதலன் ஓடி வந்தனன்
சிந்து பாடிடு நீ சேர்ந்து பாடுவான்
ஆண்முகம் காணும் பெண்மனம் நாணம்
அடைவதும் ஏனோ அதிசயம் தானோ,

பெண்: ஆண்மையை வெல்லும் நாணமே—எங்கள்
அணிகலம் அதுவே துணைபலம் அன்றோ (பாடு)

பெண்: நிலவினை எங்கே காணோம்—இந்த
நேரத்திலே தனியாக ஆனோம்

ஆண்: தலை மறைவாகவே கலைமதிமுகமே
சாகசம் செய்வதில் தான் என்ன சுகமே

பெண்: தொட்டால் குளிரும் விட்டு விலகினால்
சுடுமே காதல் நெருப்பு

ஆண்: விட்டு விலகுதல் இனியேது—எந்த
வெப்பமும் நம்மை அணுகாது— (வீசு தென்றலே)

இயற்றியவர்: 5 பாடியவர்:
பி. கே. முத்துசாமி பி. பி. சீனிவாசன்

ஏன்சிரித்தாய் என்னைப் பார்த்து—உன்
எழில் தன்னைப் பாடவா தமிழைச்சேர்த்து (ஏன்)

விந்தைகள் பேசும் விண்மீன்கள் கூட்டத்திலே
விளையாடும் வெண்மதி நீ தானா!
எந்தை முன்னோர்கள் இயலிசை நாடகம்
பயின்ற தெல்லாம் உன்னிடம் தானா! (ஏன்)

சோலை நடுவிலே தூய தமிழ்ப் பாடும்
நீலக் குயிலும் நீ தானா!
கானில் வாழ்ந்திடும் மானின் இனத்திலே
கவரிமான் என்பதும் உன்னினம் தானா! (ஏன்)

இயற்றியவர்: 6 பாடியவர்கள்:
பி. கே. முத்துசாமி பி. பி. சீனிவாசன்
பி. சுசீலா

கண்ணும் கண்ணும்கதைபேசி களிப்பையே விலைபேசி
எண்ணத் தடாகத்திலே நீந்தி நாம் இன்பமாய் இருந்ததெல்லாம்
நின்றிருக்கும் எழிலுருவம் நெஞ்சிலிருந்து பேசுது
என்றுநான் உன்னையேற்று இனியவாழ்வு பெறுவது—
அன்றுதொட்ட கண்ணிரண்டும் இன்று காணத்துடிக்குது
அல்லல் உறும் மனதிலே அமைதிகாண அழைக்குது
நேசமுள்ள நெஞ்சுதனை நெருப்பாலே சுடுவதா
வாசமிழந்த மலராக வாடி நாங்கள் தவிப்பதா
பண்போடு கலந்தஅன்பு பலனில்லாமல் போவதா
கண்கொட்டும் களிப்பெல்லாம் கண்ணீராய் ஆவதா—
கண்ணும் கண்ணும் கதைபேசி களிப்பையே விலைபேசி
எண்ணத் தடாகத்திலே நீந்தி நாம் இன்பமாய் இருந்ததெல்லாம்
கனவா

இயற்றியவர்:
மருதகாசி

7

பாடியவர்:
ஜமுனாராணி

அத்தானைப்பாரு—அடி அம்மா உஷாரு—திருக்
குத்தாலத்திலே இருந்து இவரு வந்திருக்காரு— (அத்தானை)

பத்தாம் பசலி பட்டிக்காட்டை சுத்தி வந்தவரு
பல்லைக் காட்டி கூழைக்கும்பிடு போடக் கத்தவரு
புத்தம் புது சிலுக்குஜிப்பா போட்டிருப்பாரு
அத்தனையும் வாடகைக்கு வாங்கிருப்பாரு— (அத்தானை)

சிவப்புத் துணியைத் தெருவில் கண்டா திரும்பிப் பாப்பாரு
திருட்டு முழி முழிச்சுகிட்டு விசிலடிப்பாரு
பவுசு கெட்ட முகத்தைப் போயி பார்த்ததும் யாரு—நம்ம
பச்சைக் கிளிக்கு ஏத்தவரா மாப்பிள்ளை இவரு— (அத்தானை)

காதல் என்றால் என்னவிலை என்று கேட்பாரு
கட்டுப் பெட்டி இவரைப்போல ஆம்பிளை யாரு
சேதி சொல்வேன் ரகசியமா காதிலே கேளு—
சித்தாடைக்கு ஆசை வச்சு காத்திருக்காரு— (அத்தானை)

இயற்றியவர்:
தஞ்சை ராமையாதாஸ்

8

பாடியவர்கள்:
ராதா ஜெயலட்சுமி
சூலமங்கலம் ராஜலட்சுமி

நாட்டுக்கோர் தந்தையடி—பாரத
நாட்டுக்கோர் தந்தையடி—கை
ராட்டை கொண்டே சுதந்திரம்
வாங்கித் தந்தாரடி (நாட்டுக்)

ஓட்டைப்பல் அழகரடி—சகியே
ஓட்டைப்பல் அழகரடி—அன்று
உண்ணாமல் உறங்காமல்
சிறையிலே தவம் இருந்தாரடி (நாட்டுக்)

அகிம்சையின் ஒளிவீசும் மூக்குக் கண்ணாடி
அணிந்து புன்னகையோடு வருவார் தள்ளாடி—அவர்
அன்பெனும் தாரகத்தை அடைந்தவர் பலகோடி
அடிமையான விலங்கு யாவும் தகர்ந்திட
உரிமையோடு உடல் பொருள் யாவையும் தந்த (நாட்டுக்)

கள்ளமே இல்லாத பரதேசி—அவர்
காஷாயம் அணியாத சந்யாசி—துயர்
எல்லையிலே வாழ்ந்த சுகவாசி—என்றும்
இணையிலாத செயல் புரிந்ததால் மக்கள்
மன முலாவிடும் மகாத்மா காந்தி— (நாட்டுக்)

இயற்றிவர் : 9 பாடியவர் :

மருதகாசி பி. சுசீலா

பட்டுச் சிறகடித்தே—பறக்கும்
சிட்டுக் குருவிகளா—
சிறைப் பட்டுத் தவித்துருகும் பாவைஎன்
பரிதாபம் காணீர்களா!

தட்டிப் பறித்து வந்தே—என்னே
சஞ்சலக் கூட்டுக்குள்ளே—
ஒரு துஷ்டன் அடைத்துவிட்டான்—பெரும்
துன்பத்தில் ஆழ்த்திவிட்டான்—இதை
விட்டுப் பறப்பதற்கோ—எனக்கு
இறகுகள் ஏதுமில்லே—என்னேத்
தொட்டுக் கலந்தவர்க்கே—இதைப்போய்
சொல்லிட மாட்டீர்களா! (பட்டு)

முத்து முத்தாய் கண்ணீர்துளியை
முகத்தினில் சோரவிட்டே—இங்கு
எத்தனே நாள் இன்னும்—நான்
இவ்விதம் வாடுவதோ—மனம்
பித்து பிடிக்கு முன்னே—இந்தப்
பேதை படுந்துயரை—என்
அத்தானிடத்தில் சொல்லி—அழைத்தே
வந்திட மாட்டீர்களா— (பட்டு)

இயற்றியவர் : 10 பாடியவர்:

மருதகாசி ஜமுனாராணி

இன்ப வாழ்வு மலரச் செய்யும் திருமணம்—அதைநான்
எண்ணும்போது இனித்திடுதே என் மனம்—

சிங்கார மங்கையர்கள் திருவிளக்கு ஏற்றுவார்
செந்தாழம் பூமுடித்து தங்கநகை பூட்டுவார்
மங்கலமாய் மாலே சூட்டுவார்—என் ஆசை அத்தான்
செங்கரும்பு போல இனிக்கும் பாதை காட்டுவார்—(இன்ப)

கண்ணுலே ஏதேதோ கதையெல்லாம் சொல்லுவார்
கண்ணடிக் கன்னம் சிவக்கவே கிள்ளுவார்
சொன்னலும் கேட்கமாட்டார்—என் ஆசை அத்தான்
வெண்ணிலாவைக் காட்டி எந்தன் நெஞ்சை அள்ளுவார்—
(இன்ப)

விரைவில் வருகிறது!

S. MUBARACK
Hajee Mahal
DUR Po.



அருணாசலம் பிக்சர்ஸ்

கைதியின் காதலி

தயாரிப்பு & டைரக்ஷன்

A.K. வேலன்

INDRAS